


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், 13.5.2023 அன்று முகாம் அலுவலகத்தில், தமிழர்களின் மாபெரும் பேரரசான சோழ சாம்ராஜ்ஜியத்தின் வரலாற்று சிறப்பினை விளக்கும் ‘சோழர்கள் இன்று’ நூலினை வெளியிட்டார். உடன் நூலின் தொகுப்பாசிரியர் சமஸ், தினமலர் ஆசிரியர் ஆர். கிருஷ்ணமூர்த்தி, வெளியீட்டாளர் ஆர். லட்சுமிபதி ஆகியோர் உள்ளனர்.

## கொரோனா கட்டுப்பாடுகளை நீக்கியது அமெரிக்கா!

வாஷிங்டன், மே 15 -

உலகை அச்சுறுத்திவந்த கொரோனா வைரஸ் தற்போது தடுப்பூசிகள் மற்றும் கட்டுப்பாடுகளின் மூலம் கட்டுக்குள் வந்துள்ளது. கொரோனா உச்சத்தில் இருந்த சமயத்தில் பல்வேறு நாடுகள், வெளிநாட்டு பயணிகள் தங்கள் நாட்டிற்குள் நுழைய தடை விதித்து இருந்தன. மேலும், கடும் கட்டுப்பாடுகளும் விதிக்கப் பட்டன.

தற்போது கொரோனா கட்டுக்குள் வந்துள்ள நிலையில், மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியு ள்ளனர். மேலும், உலக நாடுகள் விதித்திருந்த கட்டுப்பாடுகளையும்தளர்த்தியது.

இந்த நிலையில், வெளிநாட்டு பயணிகளுக்கான கொரோனா கட்டுப்பாடுகளை அமெரிக்கா நீக்கியுள்ளது. இது தொடர்பாக வெள்ளை மாளிகை கூறும் போது, அரசு ஊழியர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் வெளிநாட்டு பயணிகளுக்கான கொரோனா கட்டுப்பாடுகள் மே 11 முதல் நீக்கப்படுகிறது என அறிவித்துள்ளது.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு தஞ்சை வடக்கு மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியில் அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன் ஏற்பாட்டில் நடைபெற்ற தொடர் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, செ.இராமலிங்கம் எம்.பி, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ ஆகியோர் பரிசுகளை வழங்கினர். பின்னர் கவிஞர் நந்தலாலா தலைமையிலான குழுவினரின் நகைச்சுவை பட்டிமன்றம் நடைபெற்றது. விழாவில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பேரூர்க் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### “ஈடில்லா ஆட்சி 2 ஆண்டே சாட்சி”

# 1,866 பயனாளிகளுக்கு ரூ.3.69 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்!

### அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர்!

திருப்பூர், மே 15 -

முதலமைச்சர் அவர்களின் ஆற்றல் மிக்க தலைமையிலான அரசின் ”ஈடில்லா ஆட்சி 2 ஆண்டே சாட்சி” 1,866 பயனாளிகளுக்கு ரூ.3.69 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர்.

திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஒன்றியத்திற்குட்பட்ட கொடுவாய் சுப்பராய கவுண்டர் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல் மிக்க தலைமையிலான அரசின் ”ஈடில்லா ஆட்சி 2 ஆண்டே சாட்சி” அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 08.05.2023 திங்கட்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் தலைமையில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்விழாவில் சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 303 பயனாளிகளுக்கு ரூ.36.36 இலட்சம் மதிப்பீட்டில் இந்திரா காந்தி தேசிய முதியோர் உதவித் தொகையையும், 251 பயனாளிகளுக்கு ரூ.30.12 இலட்சம் மதிப்பீட்டில் விதவை உதவித் தொகையையும், 10 பயனாளிகளுக்கு ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் ஊனமுற்றோர் உதவித் தொகையையும், 3 பயனாளிகளுக்கு ரூ.36,000 மதிப்பீட்டில் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவித் தொகையையும், 05 பயனாளிகளுக்கு ரூ.60,000 மதிப்பீட்டில் கணவரால் கைவிடப்பட்டவர் உதவித் தொகையையும், 05 பயனாளிகளுக்கு ரூ.60,000 மதிப்பீட்டில் ஆதரவற்ற விதவை உதவித் தொகையையும், 07 பயனாளிகளுக்கு ரூ.84,000/ மதிப்பீட்டில் முதிர் கன்னி உதவித் தொகையையும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் சார்பில் 16 பயனாளிகளுக்கு ரூ.13.36 இலட்சம் மதிப்பீட்டில் பெட்ரோல் ஸ்கூட்டர்களையும்,

ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் 600 பயனாளிகளுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கான உதவியையும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணியிடத்து விபத்து மரண உதவித் தொகையையும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யினர் நலத்துறையின் சார்பில் 83 பயனாளிகளுக்கு தனி நபர் குடியிருப்பு உரிமை ஆவணங் களையும், 85 பயனாளிகளுக்கு தனி நபர் விவசாய உரிமை ஆவணங்களையும், 5பயனாளிகளுக்கு ரூ.29,865 மதிப்பீட்டில் இலவச தையல் இயந்திரங்களையும், 76 பயனாளிகளுக்கு ரூ.58.35 இலட்சம் மதிப்பீட்டில் இ பட்டாக் களையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 26 பயனாளி களுக்கு ரூ.1.56 இலட்சம் மதிப்பீட்டில் விலையில்லா தையல் இயந்திரங்களையும், 19 பயனாளிகளுக்கு ரூ.92,549 மதிப்பீட்டில் விலையில்லா தேய்ப்பு பெட்டிகளையும்,

வேளாண்மைத்துறையின் சார்பில் மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 15 பயனாளிகளுக்கு ரூ.13,353 மதிப்பீட்டில் தார்பாலின்களையும், 24 பயனாளிகளுக்கு ரூ.35,095 மதிப்பீட்டில் பண்ணைக்கருவிகள் தொகுப்புகளையும், வேளாண் காடுகள் வளர்ப்பு திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.45315 மதிப்பீட்டில் மரங்கன்றுகளையும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 25 பயனாளிகளுக்கு ரூ.56,000 மதிப்பீட்டில் விசைத்தெளிப்பான் களையும், பிரதம மந்திரி நுண்ணீர் பாசனத்திட்டத்தின் கீழ் 5 பயனாளி களுக்கு ரூ.3.54 இலட்சம் மதிப்பீட்டில் தெளிப்பான்களையும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் 1 பயனாளிக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் டிராக்டரையும், மகளிர் திட்டம்

தமிழ்நாடு ஊரக மற்றும் நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் 100 பயனாளிகளுக்கு ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் தொழில் புரிவோருக்கு தனி நபர் கடனுதவிகளையும், 70 பயனாளிகளுக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் சுய உதவிக்குழுக்களுக்கு ஆதார நிதியுதவிகளையும், 100 பயனாளிகளுக்கு ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் சுய உதவிக்குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியுதவியையும், 1 பயனாளிக்கு ரூ.37.00 இலட்சம் மதிப்பீட்டில் பெருங்கடனுதவியையும், மாவட்ட முன்னோடி வங்கியின் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் மகாநதி குழு குடிசை மாற்றுவாரிய வீடு ஒதுக்கீடுக்கான கடனுதவியையும், தாட்கோ மூலம், 2 பயனாளிகளுக்கு ரூ.3.93 இலட்சம் மதிப்பீட்டில் டூரிஸ்ட் வண்டி கடனுதவியையும்,

2 பயனாளிகளுக்கு ரூ.2.38 இலட்சம் மதிப்பீட்டில் பேசன்ஜர் ஆட்டோ வண்டி கடனுதவியையும், 2 பயனாளிகளுக்கு ரூ.31.52 இலட்சம் மதிப்பீட்டில் லோடு வண்டி கடனுதவியையும், 1 பயனாளிக்கு ரூ.22.50 இலட்சம் மதிப்பீட்டில் மருத்துவமனை உதவித்தொகையினையும், 1 பயனாளிக்கு ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் விவசாய உரக் கடை கடனுதவியும், 1 பயனாளிக்கு ரூ.2.24 இலட்சம் மதிப்பீட்டில் ஆடு வளர்ப்பு உதவித் தொகையும், 1 பயனாளிக்கு ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் வாடகைப் பத்திரக் கடை உதவித்தொகையும் என மொத்தம் 1866 பயனாளிகளுக்கு ரூ.3,69,58,321 மதிப்பீட்டிலான நல்த் திட்ட உதவிகளை செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர்.

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், திருப்பூர் சார் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய் நாராயணன், தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் குமரேசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) வரலட்சுமி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) அம்பாயிரநாதன், பொங்கலூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் துஊஞ எஸ்.பாலுசாமி, குண்டடம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சிவ.செந்தில்குமார், பல்லடம் நகர செயலாளர் ந. இராஜேந்திரகுமார், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் கீர்த்தி சுப்ரமணியம், அவைத் தலைவர் முத்துரத்தினம், துணைச் செயலாளர் லதா வெங்கடாசலபதி, ஒன்றிய கவுன்சிலர் அ.பாலகிருஷ்ணன் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, வார்டு, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திரு.வி.க.நகர் தொகுதியில் உயர்கல்வி வழிகாட்டுதல் முகாம்!

சென்னை, மே 15 -

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதி வார்டு எண் 72 ல் யில் உள்ள சமுதாய நலக்கூடத்தில், பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ-மாணவியர்கள் பயன் பெறும் வகையில் அடுத்த என்ன படிப்பை தேர்வு செய்து படிக்கலாம்? என்று இருக்கும் மாணவர்கள் பயன்பெறும் விதமாக உயர்கல்வி வழிகாட்டுதல் முகாம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் பன்னிரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற திரு. வி.க.நகர் மற்றும் சென்னையை சுற்றியுள்ள மீஞ்சூர், அத்திப்பட்டு எழும்பூர், வியாசர்பாடி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதியில் வசிக்கும் மாணவ மாணவியர்க்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் மதுரை சமுதாயக் கல்லூரி ஆகியவை இணைந்து உயர்கல்வி வழிக்காட்டுதல் முகாம் நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கழக துணை அமைப்பு செயலாளர், தமிழ்நாடு சட்டமன்ற சட்டவிதிகள் குழு தலைவர், திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப. தாயகம்கவி கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி நிகழ்ச்சியைத் துவக்கி வைத்து உரையாற்றினார்.

மேலும், அவர் பேசும் போது பன்னிரெண்டாம் வகுப்பு படித்து முடித்த மாணவர்கள் அடுத்து என்ன படிக்கலாம் என்றும், எது போன்ற கல்வியைத் தேர்ந்தெடுத்து படிக்க வேண்டும் என்கிற நல்ல பல ஆலோசனைகளை வழங்கினார்.

## தி.மு. கழக அயலக அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### எம்.எம்.அப்துல்லா எம்.பி. அறிவிப்பு!

தி.மு. கழக அயலக அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் வருகின்ற 17.05.2023 புதன்கிழமை மாலை 5 மணியளவில் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற இருக்கின்றது. கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. தலைமையில் கூட்டம் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் கழக அயலக அணி இணை, துணைச் செயலாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள் : முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, கழக ஆக்கப் பணிகள்

**எம்.எம்.அப்துல்லா எம்.பி.**
செயலாளர் - தி.மு.க. அயலக அணி



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரியில் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர், விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி ஆய்வு மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து மருத்துவமனையில் பணிபுரிந்து வரும் செவிலியர்களுக்கு செவிலியர் தினத்தை முன்னிட்டு வாழ்த்துக்களை தெரிவித்தார். ஆர்.எம்.ஓ.ரவிகுமார், ஏ.ஆர்.எம்.ஓ. வெங்கடேசன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஜெ.ஜெயபால், வேம்பி. ஜெ.ரவி, முன்னாள் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் எத்திராஜன், ஒன்றிய கவுன்சிலர் இளவரசி ஜெயபால், ஒரத்தூர் கிளை செயலாளர் சுதாகர் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## தி.மு.க. தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர் பட்டியல்

8 ஆம் பக்கத் தொடர்ச்சி

அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்.

**வேலூர் மாவட்டம்**

**தலைவர்** - ஸ்ரீரங்கன் (எ) ஸ்ரீ ரங்கநாத செல்வன், கருகம்பத்தூர் வேலூர் ஒன்றியம் வேலூர் மாவட்டம்.

**துணைத் தலைவர்** - பி. முருகன், பாலவிநாயகர் கோயில் தெரு, மேட்டுபாளையம், பென்னாத்தூர், வேலூர் மாவட்டம்.

**அமைப்பாளர் - ஆர்.கோபி**, மாரியம்மன் கோயில் தெரு, தொரப்பாடி, வேலூர் மாவட்டம்.

**துணை அமைப்பாளர்கள்** - ஜி.டி. மணி (எ) பாலசுப்பிரமணியம், அணிகர் தெரு, கிருஷ்ணா நகர், வேலூர் மாவட்டம். ஜெ. கருணாநிதி, மாரியம்மன் கோயில் தெரு, பெருமாள்குப்பம் அஞ்சல், எருக்கம்பட்டு, வேலூர் மாவட்டம். ஏ.எஸ். டவெங்கடேசன், கொத்தகுப்பம் கிராமம், ராஜகல் அஞ்சல், வேலூர் மாவட்டம். ஆர். கோபாலகிருஷ்ணன், 35/8, ராஜாஜி தெரு, நடுப்பேட்டை, வேலூர் மாவட்டம். எஸ். கேசவன், தாமோதரன்பேட்டை, மேல்காவனூர், வேலூர் மாவட்டம். ச. கார்மேகம், குட்டைமேடு கிராமம், எர்த்தாங்கல் ஊராட்சி, குடியாத்தம், வேலூர் மாவட்டம்.

**திருப்பத்தூர் மாவட்டம்**

**தலைவர்** - டி.பி. ரமேஷ், 6/24, தஞ்சையம்மன் கோயில் தெரு, திருப்பத்தூர் மாவட்டம்.

**துணைத் தலைவர்** - சி. வீரப்பன், மேல் அச்சமங்கலம், திருப்பத்தூர் வட்டம், திருப்பத்தூர் மாவட்டம்.

**அமைப்பாளர் - கா. தேவராஜ்**, 2/162, பைரவன் வட்டம், கட்டேரி கிராமம், பக்கிரிதர்கா அஞ்சல், ஜோலார்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டம்.

**துணை அமைப்பாளர்கள்** - சி. சத்தீஷ்குமார், 73, மாரியம்மன் கோவில் தெரு, பெரியவாக்கம் கிராமம், ஆம்பூர் தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம். து. திருக்குமரன், இந்திரா நகர், பெரியவாக்கம் கிராமம், துத்திப்பட்டி அஞ்சல், ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம். டி.எம். நடராஜன், 77/3, கொல்லிமேடு, தோக்கியம் அஞ்சல், திருப்பத்தூர் தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம். ஆர்.கே. இராஜேந்திரன், 1/17எ, இரண்டாவது வீதி, ஆனந்தா நகர், பைபாஸ் ரோடு, ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம். கே. பரமசிவம், 506/3, காந்திபுரம், கதிரிமங்கம், சி.கே. அசிரிமம் (அ), திருப்பத்தூர் மாவட்டம்.

**இராமநாதபுரம் மாவட்டம்**

**தலைவர்** - கா. தங்கராஜ் எம்.ஏ., மஞ்சூர்அஞ்சல், பரமக்குடி தாலுக்கா, இராமநாதபுரம் மாவட்டம்.

**துணைத் தலைவர்** - செ. அப்துல்ஹக்கீம், 1/325, வண்ணாங்குண்டு. இராமநாதபுரம் மாவட்டம்.

**அமைப்பாளர் - மு. இரவிக்குமார்**, 11, முஸ்லீம் தெரு கிழக்கு, இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம்.

**துணை அமைப்பாளர்கள்** - சுப. ராஜேஸ்கண்ணன், 4/16, வத்தாபட்டி, சி.கே. மங்கலம், திருவாடனை, இராமநாதபுரம் மாவட்டம். மு. செல்வேந்திரன், 122, மூலக்கொத்தாளம், இராமநாதபுரம் மாவட்டம். து. ரெத்தினவேல் பாண்டியன், சூச்சவி, கல்லூர் அஞ்சல், திருவாடனை தாலுக்கா, இராமநாதபுரம் மாவட்டம். க. முத்துராமலிங்கம் பி.ஏ., 5/31, இ. நெடுங்குளம், இளஞ்செம்பூர், கடலாடி, இராமநாதபுரம் மாவட்டம். க. அப்துல்காதர், 12/10, சின்னக்கடை தெரு, கீழக்கரை, இராமநாதபுரம் மாவட்டம்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18.
நாள் : 10-05.2023

**பிடிசி ஜி.செல்வராஜ்**
செயலாளர்
தி.மு.க. தொழிலாளர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆ.பாலு (எ) திராவிட பாலு
### மே 15 (2013)



**இளமைக் காலம் முதற்கொண்டு திராவிட இயக்கத்தில் பற்று கொண்டு திருவள்ளூர் மாவட்டம், கன்னிகைப்பேர் கிளைச் செயலாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும், இருமுறை எல்லாபுரம் ஒன்றியச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும், மூன்று முறை கன்னிகைப்பேர் ஊராட்சி மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.**

**மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு மூன்றுமாத காலம் சிறைவாசம் அனுபவித்தவர். மேலும் கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**